1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இப்படி எதுவும் கவனத்திற்கு வந்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாதம் பூராவும் மக்கள் நல்ல முறையிலே உபயோகிக்க வேண்டுமென்ற முறையிலே அதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். புதிதாக சில சொசைட்டிகளை ஏற்பாடு செய்வதால் கொஞ்சம் காலதாமதம் இருக்கிறது. அது விரைவாக நிவர்த்தியாக இருக்கிறது கூட்டுறவுத் துறையிலே செயல்படுவதால்.

வீட்டுவசதி சிறப்புத் திட்டம்

* **115 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டில் ஒரு லட்சம் வீடு கட்டுகின்ற திட்டத்தை அமுல்படுத்த, தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது உத்திரவு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கே. என். குராமசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டம் கேரள மாநிலத்திலே செயல்பட்டு மத்திய சர்க்காரின் மூலம் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட திறப்பு விழா நடத்தப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதேபோல் திட்டத்தை நம்முடைய மாநிலத்திற்குக் கொடுத்திருக்கிறார்களா ? இல்லையென்றால் அந்தத் திட்டத்தின் பெயரால் கொடுக்காமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, கேரள மாநிலத்தில் இப்படி ஒரு திட்டத்தை திரு. கோவிந்த நாயர் அவர்கள் தீட்டி நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அதன் காரணமாக இப்பொழுது அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதா இல்லையா என்ற ஆராய்ச்சியில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.